

திருவள்ளூர் மத்திய மாவட்டம் பூந்தமல்லி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் வரதராஜபுரம் கருப்பட்டி அருகில் தண்ணீர் பந்தல் திறப்பு விழா ஒன்றிய செயலாளர் ப.ச.கமலேஷ் தலைமையில் மாவட்ட மகளீர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் சுமதிஅத்திகிரி முன்னிலையில் நடைபெற்றது இதில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தண்ணீர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு இளநீர் நீர் மோர் தர்பூசணி உள்ளிட்ட பல்வேறு பழம் வகைகள் வழங்கினார் உடன் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, சி.ஜெரால்டு, எம். முத்தமிழ்செல்வன், வி.குமார், கு.தமிழ்செல்வி, ஏ.ஜனார்த்தனன், எம்.இளையான், எஸ்.புகழேந்தி, ஏ.ஆர்.பாஸ்கர், வயலைபிரபாகரன் வி.பி.பிரகாஷ், பரிமளழகன், கேசவன், கே.ஜி.ஆர்.ஸ்டாலின், கோவி மணிகண்டன், ஏழுமலை, பொன்.மாடசாமி, திராவிட பாலா சைமன், ஞானமூர்த்தி, சதீஷ், பாபு, உள்பட பலர் உள்ளனர்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி மேற்கு ஒன்றியம் திமுக சார்பில் முதல்வரின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் சட்ட மன்ற உறுப்பினர் டி.ஜெ.கோவிந்தராஜன் தலைமையில் மு.மணிபாலன், பா.செ.குணசேகர், ஜெ.மோகன்பாபு, ஆர். சீனிவாசன் வரவேற்பில் நடைபெற்றது இதில் மாவட்ட செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் சிறப்புரையாற்றி 1000 பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார் உடன் சேலம் சுஜாதா, தூத்துக்குடி சரத்பாலா, மு.பகலவன், பி.ஜெ.மூர்த்தி, சி.எச்.சேகர், கே.வி.ஜி. உமா மகேஸ்வரி, எஸ்.ரமேஷ், பி.வெங்கடாசலபதி, ஏ.வி.ராமமூர்த்தி, தமிழ் சாதிக், லயோலா ராஜசேகர், ஜோதிலிங்கம், திருஞானம், உதயா காந்தம்மாள், பரத்குமார், ஜெயபிரகாசம், முனிவேல் முத்துசாமி, புனிதவள்ளி வெங்கடாஜலபதி, மாலதி குணசேகர், சாரதாம்பாள் முத்துசாமி, பா.து.தமிழரன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்

### கச்சேபேஸ்வரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு! காஞ்சிபுரத்தில் உள்ள

# சாந்தலீஸ்வரர் திருக்கோயிலுக்கு ரூ.5.50 கோடியில் திருமண மண்டபம்!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, ஏப். 3-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று முன்தினம் (1.04.2025) வினா விடை நேரத்தின் போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு , காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தார்.

அதுபோது நடைபெற்ற விவாதம் வருமாறு:



**சி.வி.எம்.பி.எழிலரசன்:** காஞ்சிபுரம் தொகுதி, காஞ்சிபுரம் மாநகராட்சி, பிள்ளையார் பாளையம், கன்னியம்மன் திருக்கோயில் குளத்தை தூர்வாரி புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** உறுப்பினர் கோரிய கன்னியம்மன் திருக்கோயிலானது இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இல்லை. இருப்பினும் அந்த குளத்தை தனியார் பங்களிப்போடு அவரும், நானும் சேர்ந்து திருப்பணி செய்வதற்கு எடுத்துக் கொள்வதற்கு உண்டான முயற்சிகளை மேற்கொள்வோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**சி.வி.எம்.பி.எழிலரசன்:** அமைச்சர் அறிவித்த பதிலை முதலில் வரவேற்று, காஞ்சிபுரத்தில் உள்ள சாந்தாலீஸ்வரர் திருக்கோயில் என்பது வியாசர் அவர்களால் பிரதிஷ்டை செய்து வழிபட்ட கோயில் என்று சொல்லப்படுகிறது. அக்கோயிலுக்கு பொதுமக்கள் அதிகளவில் வந்து முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்வது போன்ற வேண்டுதல்களை நிறைவேற்றக்கூடிய ஒரு கோயிலாக இருக்கிற காரணத்தினால் அங்குள்ள சிதிலமடைந்த குளத்தினை சீரமைத்து தருவதன் மூலமாக பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உகந்ததாக அமையும் என்பதனை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கையாக வைத்து, அதேபோல காஞ்சிபுரத்தில் உள்ள காயாரோகணேஸ்வரர் திருக்கோயில் என்ற குரு கோயில் ஒன்று இருக்கிறது. எட்டாம் நூற்றாண்டில் முதலாம் குலோத்துங்க சோழனால் கட்டப்பட்டது. அந்த திருக்கோயிலுக்கு சொந்தமான இரண்டரை ஏக்கர் நிலம் காலியாக உள்ளது. எவ்விதமான ஆக்கிரமிப்புகளும் இல்லாமல் பாதுகாக்கப்பட்டு இருக்கக்கூடிய அந்த நிலத்தில் ஒரு திருமண மண்டபம் கட்டி தருகிற போது பொதுமக்களுக்கு ஏதுவாக அமையும் என்பதனை தெரிவித்து அரசு கட்டித் தர முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** உறுப்பினர் அவர்கள் கோரிய சாந்தாலீஸ்வரர் திருக்கோயிலில் திருக்குளத்தை ஏற்கனவே 50 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் படித்துறை அமைத்து சீரமைக்கின்ற பணிக்கு ஏற்கனவே மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கின்றது. போதிய நிதி வசதி இல்லை. இருந்தாலும் அவர் கோரிய இந்த திருக்கோயிலுக்கு தமிழ்நாடு முதல்வர் அவர்களின் உத்தரவினை பெற்று இந்த ஆண்டு ஆணையர் பொது நல நிதியில் எடுத்துக் கொள்வதற்குண்டான வழி வகைகளை காண்போம். அதேபோல் அவர் கூறிய மற்றொரு திருக்கோயிலுக்கு சொந்தமான இடம் இரண்டரை ஏக்கர் இருக்கின்றது. அங்கு திருமண மண்டபம் அமைக்க ரூ.5.50 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கின்றது. அதற்கும் போதிய நிதி வசதி அந்த திருக்கோயிலில் இல்லாததால் பெரிய கோயில்களிலிருந்து கடனாகவோ அல்லது ஆணையர் பொதுநல நிதியை பெற்றோ முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு அந்த திருக்கோயிலுக்கு திருமண மண்டபம் கட்டித் தரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**சி.வி.எம்.பி.எழிலரசன் :** அமைச்சர் அவர்கள் மிகுந்த அன்போடு இதை தெரிவித்தமைக்காக தொகுதி மக்களின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அதே போன்று நெசவாளர்கள் அதிகம் வாழக்கூடிய காஞ்சிபுரம், பிள்ளையார் பாளையத்தில் கச்சேபேசுவரர் திருக்கோயில் இருக்கிறது. அந்த கோயில் அருகாமையிலே தான் அறிஞர் அண்ணா நூற்றாண்டு பூங்காவும் அமைந்திருக்கிறது. அங்கே குடியிருப்புகளும் இருக்கிறது. அந்த கோயிலுக்கு அதிக அளவில் நிதியும் இருப்பதாக நான் அறிகிறேன். அந்த கோயிலுக்கு சொந்தமான ஒரு ஏக்கர் நிலம் இருப்பதனால் அந்த இடத்தில் திருமண மண்டபத்தை கட்டி தர முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன். அடுத்ததாக, தொன்மையான ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கு திருப்பணி மேற்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் வைத்ததின் அடிப்படையில் அமைச்சர் அவர்களே நேரடியாக ஆய்வு செய்து அதற்கான திருப்பணி தொடங்குவதற்கு உத்தரவிட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதை விரைவாக முடித்து, குடமுழுக்கு விழா காண வேண்டும் என்று பொதுமக்களோடு நானும் ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறேன், குடமுழுக்கு விழா எப்பொழுது நடத்தி தரப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** உறுப்பினர் அவர்கள் கோரிய கச்சேபேசுவரர் திருக்கோயிலுக்கு ஏற்கனவே ரூ.5.50 கோடி செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு போதிய நிதி வசதி இல்லை என்பதனால் முதல்வர் அவர்களின் உத்தரவை பெற்று, இதற்கும் கூடுதலாக வருமானம் இருக்கின்ற திருக்கோயிலிலிருந்து நிதியை கடனாக பெற்று இந்த பணியும் மேற்கொள்ளப்படும். அதோடு மட்டுமல்லாமல் காஞ்சிபுரம் நகரமே திருக்கோயிலின் நகரமாகும். அந்நகரத்தில் மட்டும் 168 திருக்கோயில்கள் இந்து சமய அறநிலையடத்துறைக்கு சொந்தமாக இருக்கின்றது. இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் 2022 ஆம் ஆண்டு உறுப்பினர் அவர்கள் அந்த திருக்கோயிலுக்கு ஆய்விற்கு அழைத்துச் சென்றார். அங்குள்ள ஆயிரம் கால் மண்டபமானது 17 ஆண்டுகளாக பயன்பாட்டில் இல்லாமல் மூடி வைக்கப்பட்டிருந்தது. இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் திறக்காத திருக்கோயில்களின் கதவுகள் கூட திறந்தது என்ற வரலாறு திராவிட மாடல் ஆட்சி நாயகன் முதல்வர் அவர்களுக்கு உண்டு. அந்த வகையில் அந்த திருக்கோயிலின் ஆயிரம் கால் மண்டபத்தை 17 ஆண்டுகளுக்குப் பிறகு திறந்து வைத்த பெருமையும் முதல்வர் அவர்களுக்கு உண்டு.

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோயிலுக்கு சொந்தமான இடத்தில் சென்னையில் சீதா கிங்ஸ்டன் அறக்கட்டளையின் சார்பில் நடத்தப்பட்டு வந்த பள்ளியானது தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தினால் 2021 ஆம் ஆண்டு மூடப்பட வேண்டிய சூழல் ஏற்பட்டது. இதனை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றவுடன் அந்தப் பள்ளியை திருக்கோயில் சார்பில் ஏற்று நடத்திட உத்தரவிட்டதை தொடர்ந்து, இன்றைய தினம் 11 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட 32 கூடுதல் வகுப்பறைகளோடு 1,035 மாணவ, மாணவியர் கல்வி பயின்று கொண்டிருக்கின்றார்கள். அந்தப் பள்ளி மாணவர்களும் கல்வி கற்கின்ற வகையில் ஒரு கடவுளாக இருப்பவர் நம்முடைய முதல்வர் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, ஏகாம்பரநாதர் திருக்கோயிலில் 23.80 கோடி ரூபாய் செலவில் 31 திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் 9 பணிகள் நிறைவு பெற்றுள்ளன. மீதம் 22 பணிகள் நிறைவுற்றபின் வரும் செப்டம்பர் மாதம் அத்திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.



மாதவரம் சட்டமன்ற தொகுதி வடபெரும்பாக்கம் பகுதியில் அமைந்துள்ள காய்கறிகளை உரமாக்கும் கூடத்திலும், செட்டிமேடு பகுதியில் அமைந்துள்ள குப்பைகளை மக்கும் குப்பை, மக்கா குப்பை என்று தரம் பிரிக்கும் இடத்திலும், பணி செய்யும் பெண் தொழிலாளர்களை, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நேரில் சந்தித்து அவர்களது பணி குறித்தும், தேவைகள் குறித்தும் கேட்டறிந்து பணிகளை துரிதப்படுத்தினார். 17வது வட்டச் செயலாளர் கே.கருணாகரன், பகுதி பிரதிநிதி சி.மூர்த்தி, வட்டத் துணைச் செயலாளர் சி. பாலாஜி, வடபெரும்பாக்கம் எம்.மைக்கேல், இ.கார்த்திக், பி.செந்தில் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள், சென்னை மாநகராட்சி பணியாளர்கள் உடன் உள்ளனர்.

### 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் விரைவில் திறக்கப்படும்! 25 மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கு

# ரூ.1018 கோடியில் கட்டிடப் பணிகள் நடைபெறுகின்றன!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை, ஏப். 03-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் என்று அறிவிக்கப்பட்டு, 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இன்னும் 208 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் விரைவில் திறந்து வைக்கப்படும் என்றும், 25 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் அமைக்க ரூ.1018 கோடி செலவில் கட்டிட பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்றும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (01.04.2025) சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது பதிலளித்தார்.

**அரக்கோணம் சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு அவர் தெரிவித்ததாவது:**

இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் ஒன்றியத்தில் குருவராஜப்பேட்டை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் கடந்த 24 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. தினந்தோறும் சுமார் 150 நபர்கள் புற நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருகிறார்கள். குருவராஜப் பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பொறுத்தவரை, மூதூர் மேம்படுத்தப்பட்ட வட்டார ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உட்பட்டதாக இருக்கிறது. ஒரு ஒன்றியத்திற்கு ஒரு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் என்கின்ற விதிகளின்படி, ஏற்கெனவே மூதூரில் அமையப் பெற்றிருக்கின்ற காரணத்தினால், ,மன்ற உறுப்பினர் கூறியிருப்பதைப்போல குருவராஜப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.

ஒரு ஒன்றியத்திற்கு ஒரு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் என்பது ஒன்றிய அரசின் விதிகளில் ஒன்று. அந்த விதிகளைத் தளர்த்த வேண்டுமென்று ,மன்ற உறுப்பினர் கோருகிறார். விதிகளைத் தளர்த்தும் இடத்தில் தற்போது அவரும் இருக்கிறார். அதற்கான பரிந்துரையை அவர் செய்து, அந்த விதியைத் தளர்த்தி, ஒரு ஒன்றியத்திற்கு இன்னொரு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பெற்றுத் தருகிற முயற்சியில் அவர் ஈடுபட்டு வெற்றியடைந்தால், நிச்சயம் அங்கே ஏற்படுத்தித் தரப்படும்.

இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகுதான், இதுவரை 25 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள் அமைக்கப் பெற்றிருக்கின்றன. ரூ.1018 கோடி செலவில் கட்டடப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 19



இடங்களில், மாவட்ட அரசுத் தலைமை மருத்துவமனைகளும், 6 இடங்களில் மாவட்ட அரசு மருத்துவமனைகளுக்கு இணையான மருத்துவமனைகளும் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் ஓரிரு மாத காலங்களில் இந்த 25 இடங்களிலும் பணிகள் முடிவுற்று முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட இருக்கிறது. மன்ற உறுப்பினர் அவர்கள் கோரியிப்பதைப் போல, அரக்கோணம் தொகுதியைப் பொறுத்தவரையில் ரூ.28.20 கோடி மதிப்பீட்டில் கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் அரக்கோணம் அரசு மருத்துவமனையில் ரூ.23.75 கோடி செலவில் 50 படுக்கைகள் கொண்ட ஒரு தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டிடம் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இரண்டாம் தள மேற்கூரை அமைக்கும் பணி முடிவுற இருக்கிறது. இன்னும் ஒரு ஓரிரு மாத காலங்களில் அந்த அமைப்பு திறந்து வைக்கப்படும். அதே மருத்துவமனை வளாகத்தில் ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வுக்கூட கட்டிடம் ஒன்று ரூ.1.25 கோடி செலவில் கட்டும் பணி முடிவுறும் தருவாயில் இருக்கிறது. அதுவுமே, விரைவில் திறந்து வைக்கப்படவிருக்கிறது.

**குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு,**

குடியாத்தம் தொகுதியைப் பொறுத்தவரை அரசு மருத்துவமனை மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. ,மன்ற உறுப்பினர் அவர்கள் சொல்லியிருப்பதைப் போல, வார்டு 1,2 ஆகிய பகுதி மக்கள் பயன்பெறுகிற வகையில் ஒரு நகர்ப்புற நலவாழ்வு மையம் ஒன்று அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**பாலக்கோடு சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு,**

தரம் உயர்த்துவதென்பது துணை சுகாதார நிலையங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றுவது, ஆரம்ப சுகாதார நிலையங்களைமேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றுவது, வட்டார மருத்துவமனைகளை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளாக மாற்றுவது இப்படி தரம் உயர்த்தும் பணி எல்லாவற்றிற்குமே ஒன்றிய அரசின் அந்த விதிமுறை கள் வகுத்திருக்கிறது. அந்த விதிமுறைகளின்படிதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நிச்சயம் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருப் பதைப் போல, அவர்களுடைய மருத்துவமனையையும் எதிர்காலத்தில் மேம்படுத்துவதற்குரிய வாய்ப்பு கள் இருப்பின் மேம்படுத்தப்படும்.

**திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் கேள்விக்கு,**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் அமைக்கப்படும் என்று இதே மன்றத்தில் விதி 110ன்கீழ் 2022 ஆம் ஆண்டு மே திங்கள் 7 ஆம் தேதி அறிவிப்பு செய்தார்கள். அவ்வாறு அறிவிக்கப்பட்ட ஒரே ஆண்டில், அதாவது 2023 ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 06 ஆம் தேதி 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை ஒரே நாளில் சென்னையிலிருந்து காணொலி காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார்கள். மீதமுள்ள 208 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் கட்டும் பணிகள் தற்போது நிறைவடையும் தருவாயில் இருக்கின்றன. அதற்கான பணியாட்களை நியமிக்கும் பணிகளும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட District Health Society மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வாயிலாக இந்த மாத இறுதிக்குள் அந்த 208 நகர்ப்புற நலவாழ்வு மையங்களும் திறந்து வைக்கப்படவிருக்கின்றன.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் பதிலளித்தார்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மத்திய பகுதி இளைஞரணி சார்பில் புதிதாக தேர்வு செய்யப்பட்ட இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் அறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தல் மற்றும் தமிழக முதல்வர் கழகத் தலைவர் தளபதி அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு திருவொற்றியூர் மத்திய பகுதி இளைஞரணி அமைப்பாளர் எஸ். ஸ்டாலின் ஏற்பாட்டில், பகுதிச் செயலாளர் ஏ.வி.ஆர். ஆறுமுகம் தலைமையில் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இதில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், துணை அமைப்பாளர்கள் கேபிள் தா.வேல், கனேசன், டி.ஜி.ஆர். மனிவண்ணன், ஆர்.டி.ரமேஷ்குமார், எஸ். நாகலிங்கம் வட்ட செயலாளர் தா.கரிகால சோழன், சாலை கனேசன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை மேற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட அமைப்பாளர் இ.இளம்பாரதி ஏற்பாட்டில் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, பகுதி செயலாளர் ஏ.ஆர்.பி.எம்.காமராஜ்,வட்ட செயலாளர்கள் என்.ரவி, ஐசிஎப்.சங்கர், ஜே. விஜயகுமார், எஸ்.சசிகுமார், பேச்சாளர்கள் கரூர் முரளி, செ.ஜோதி, மருத்துவர் சுபேர்கான்,வி.பி.பொன்னரசு, ஆர்.என்.துரை, வி.என்.ராஜன், வழக்கறிஞர் ப.பிரகாஷ், கே. திருநாவுக்கரசு, சி.தினகரன், ஜே.கதிரேசன், ஜே.இருதய நாதன், எம்.ஏ. ஜெஸ்டின் ராஜ், அல்லூரி பா.சீனிவாசன், ஆ.ஐயப்பன்,ஆர்.என்.துரை, வி.என்.ராஜன், உள்ளிட்ட கழகத்தினர் கலந்து கொண்டனர்.